பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 31 புதன்கிழமை 14.02.2024 அதிர்வு 198

## துப்பாக்கி வெடித்து குடும்பஸ்தர் மரணம்

### முல்லைத்தீவில் துயரம்

முல்லைத்தீவு - குமுழமுனை, தண்ணிமுறிப்பு காட்டுப் பகுதியில் இன்று அதிகாலை வேட்டைக்குச் 04





# நாடு மீண்டும் அழிவடைய மக்கள் இடமளிக்கக்கூடாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவுறுத்து

**“2019 போன்ற கனவு உலகில் மிதந்து நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லாமல் இருக்கும் முடிவை மக்களே எடுக்க வேண்டும். நாடு எதிர் நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை.”**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் 94 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், இரத்தினபுரி, நிவிதிகல, எலபாத மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வங்குரோத்து நாட்டில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் பெற முடியாதவர், நாட்டை வங்குரோத்தடையச் செய்த தரப்பினருடன் கைகோர்த்துக் கொண்டு, ஜனாதிபதிப் பதவியைப் பெற்று, அரசு மக்களுக்கு வழங்கும் இலவச மருந்துகளில் கூடத் திருடி வருகின்றனர்.

மனித இம்யூனோகுளோபுலின், மெரோபெனெம் போன்ற பல மருத்துகளில் திருடி வருகின்றனர். மில்லியன் கணக்கான டொலர்கள் பெறுமதியான மருந்துகளை முறையற்ற வகையில் களஞ்சியப்படுத்தி வைத்தமையால், மருந்துகள் பாவனைக்கு உதவாமல் அழிந்து விட்டுள்ளன.

இவ்வாறான ஊழலைக் கண்டு ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்த போது, அரசில் இருந்து 113 பேர் இந்தத் தரமற்ற மருந்துகளுக்குத் தமது கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவித்தனர். இது போதாக் குறைக்கு நாட்டை ஏல பூமியாக மாற்றியுள்ளனர்.

மக்கள் கோரும் முறைமை மாற்றத்தை ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஏலவே ஆரம்பித்து விட்டது. பதவி ஆசை இல்லாமல், வெற்றுப் பேச்சுக்களை விடுத்து ஐக்கிய மக்கள் சக்தியே செயற் 04

## மீன்பிடிக்கச் சென்ற இருவர் பரிதாபப் பலி

### கிண்ணியாவில் சோகம்

திருகோணமலை, கிண்ணியாவில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இருவர் நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளனர்.

17 மற்றும் 35 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது படகு கவிழ்ந்ததில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.


சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

### சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில்

## மாணவர்களைத் தாக்கிய 13 பேருக்கு விளக்கமறியல்

(எம்.எப்.எம். அலி)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாயப் பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்று வந்த மூன்று மாணவர்களைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 13 மாணவர்களும் இன்று பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 15 திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு பலாங்கொடை மேலதிக நிதிமன்ற நீதிபதி ஹேஸானி ரொந்ரிகோ உத்தரவு பிறப்பித்தார். 04





# தொடரும் பணிப்புறக்கணிப்பு! நோயாளர்கள் பெரும் அவதி!!

(வசந்தன்)

வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலை தாதியர்கள், சிற்றூழியர்கள், பாமசியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து இன்றும் இரண்டாவது நாளாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள அதிகரிப்பு, ஊழியர் பற்றாக் குறையை உடன் நிவர்த்தி செய், வாழ்வாதாரத்தை அதிகரித்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 11, 16ஆம் திகதிகளில் பணிப் புறக்கணிப்பில் அவர்கள் ஈடுபட்டிருந்த மையுடன் நேற்று சுகயீன விடுமுறையில் ஈடுபட்டனர். எனினும், அதற்கு எவ்வித தீர்வும் கிடைக்கப்பெறாத நிலையில் வைத்தியர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை முழுவதும் சுகாதாரத் தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையிலும் அவசர நோயாளர் பிரிவு, நோயாளர் விடுதி, விபத்துப் பிரிவு, சத்திர சிகிச்சை பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுப்பட்ட சிற்றூழியர்கள் மற்றும் தாதியர்கள் சேவைகள் ஈடுபடுவதுடன் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் பிரிவு, ஸ்கானிங், கதிர் பிரிவு, கதிரியக்கப்பிரிவு போன்ற ஏனைய சேவைகளிலிருந்து தாதியர்கள், சிற்றூழியர்கள், பாமசியாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் முற்றாக 24 மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக கிளினிக், வெளிநோயாளர் பிரிவு, மருந்தகப் பிரிவு ஆகியவற்றுக்கு வந்த நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.
















# வாடகைக்குப் பெற்ற வாகனத்தின் பாகங்களை விற்றவர் கைதானார்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கதிர்காமத்துக்கு யாத்திரை செல்லவுள்ளனர் என்று கூறி வாடகைக்கு வாகனத்தைப் பெற்று அதனைக் கூறுகளாகப் பிரித்து விற்பனை செய்ய முயற்சித்த சந்தேக நபரொருவரை அனுராதபுரம் குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதைபொருள் ஆராய்ச்சி திணைக்கள அதிகாரி என தன்னை அறிமுகப்படுத்தித் தனியார் வாகன வாடகைக்கு விடும் நிறுவனமொன்றில் முற்பணமாக 50 ஆயிரம் ரூபாவும், இரண்டு நாள்களுக்கான வாடகை கட்டணம் 10 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 60 ஆயிரம் ரூபா செலுத்தி வாகனத்தைப் பெற்றுக் கொண்ட சந்தேக நபர் நித்தம்புவ பிரதேசத்திலுள்ள கராஜ் ஒன்றில் பாகங்களாக பிரித்து கதவு, டயர் மற்றும் முக்கிய பாகங்களை வேறு ஒரு லொரியில் ஏற்றும் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கராஜ் உரிமையாளர் சந்தேகத்தில் பொலிஸாருக்கு வழங்கிய இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சூரியவெவ கும்புக்முல்ல பிரதேசத்தில்

# போலி நாணயத் தாள்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

18 போலி நாணயத் தாள்களுடன் இரண்டு சந்தேக நபர்களை சூரியவெவ கும்புக்முல்ல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வீரகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் வீரகெட்டிய, ஹக்குறுவெல, கமுக்கமுல்ல, ஜதுரவத்த போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்று வளைப்பின் போது ஏ 4 கடதாசி அளவிலான தாளில் அச்சிடப்பட்ட 5 ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் இரண்டும், 1000 ரூபா நாணயத் தாள்கள் பத்தும், 500 ரூபா நாணயத் தாள்கள் ஆறும் சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

ஹக்குருவெல திஸ்ஸமகராம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23 வயதுடைய



ரஜரட்ட பல்கலைக்கழக மாணவன் மற்றும் 39 வயதுடைய சுய தொழில் புரியும் நபர் ஆகிய இருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்கல்ல பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பீ.கீர்த்தி ரெட்ணவின் பணிப்புரையின் பேரில் வீரகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள் வைத்திருந்த நபருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிப்பு

## மன்னார் மேல் நீதிமன்றம் அதிரடி

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பொலிஸ் பிரிவில் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு இரண்டு குற்றங்களுக்குள்ளாகிய குடும்பஸ்தருக்கு மன்னார் மேல் நீதிமன்றம் ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா ஏழு வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் தலா ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்துள்ளது.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரிசல் பகுதியில் ஒரு குடும்பஸ்தர் 2021 ஆம் ஆண்டு ஒரு கிராம் 288 மில்லி கிராம் ஹெரோயின் என்ற போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்நபருக்கு எதிரான வழக்கு மன்னார் மேல் நீதிமன்றில் இடம்பெற்ற நிலையில் வழக்கு நேற்று செவ்வாய்க் கிழமை மன்னார் மேல் நீதிமன்றில் தீர்ப்புக்காக மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.மிஹால் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

பொலிஸார் இந்நபருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்களை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.ஒன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள அளவு கொண்ட ஹெரோயின் போதைப்பொருளைத் தன் வசம் வைத்திருந்தமை. மற்றையது இப்போதைப்பொருளை விற்பனைக்காக உட்படுத்தியிருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களே தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில் இந்நபர் குற்றவாளியாகக் காணப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் மேல் நீதிமன்றம் இவருக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா ஏழு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த அபராதத்தைச் செலுத்தத் தவறின் ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குற்றங்களுக்கான தண்டனைகளைச் சம காலத்தில் அனுபவிக்க முடியும் எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அச்சுவேலியில் வெளிநாட்டு வாசியிடம் திருட்டு ஒரு மணித்தியாலத்தில் சந்தேகநபர் மாட்டினார்

வெளிநாட்டில் இருந்து வந்து , யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த நபரின் உடைமைகளைக் களவாடிய சந்தேக நபரைப் பொலிஸார் ஒரு மணி நேரத்தில் கைது செய்து களவுபோன பொருள்களையும் மீட்டுள்ளனர்.

நீண்ட காலமாக வெளிநாட்டில் வசித்து வந்தவர் விடுமுறையைக் களிக்கும் நோக்குடன் யாழ். அச்சுவேலிப் பகுதியில் வீடொன்றில் தங்கி இருந்துள்ளார்.

அந்த வீட்டினுள் நேற்று உள்நுழைந்த திருடன், வீட்டில் இருந்த வெளிநாட்டு வாசியின் மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசி, கடவுச்சீட்டு, வங்கி அட்டைகள், வங்கிப் புத்தகங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைக் களவாடிச் சென்றார்.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறையிட்டதை அடுத்து, துரித விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு ஒரு மணி நேரத்துக்குள் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞரைக் கைது செய்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் , திருடப்பட்ட பொருட்களைப் பொலிஸார் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நயினாதீவில் 20 கிலோ கஞ்சா சிக்கியது!

(எஸ்.நிதர்ஷன்)

நயினாதீவில் 20 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நயினாதீவு கடற்கரையில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய நேற்று சம்பவ இடத்துக் குக் கடற்படையுடன் இணைந்து விரைந்த விசேட அதிரடிப் படையினர் 20 கிலோ கிராம் கஞ்சாவைக் கைப்பற்றினர்.



இதனையடுத்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நாடு மீண்டும்...

பாட்டில் இதைக் காண்பித்துள்ளது.

75 வருட கால வரலாற்றில், எதிர்க்கட்சியாக இருந்து மக்களுக்காக உழைத்த ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சக்தியாகும். எனவே, 2019 போன்ற கனவு உலகில் மிதந்து நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லாமல் இருக்கும் முடிவை மக்களே எடுக்க வேண்டும். நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை.

ஒரு தரப்பினர் சிங்களம் மட்டும் என்று சொல்லும்போது, மற்றைய தரப்பினர் தமிழ் மட்டுமே எனக் கூறுகின்றனர். இப்படியே போனால் பழைய பயணத்தை இன்னும் 75 வருடங்களுக்கும் தொடரலாம். இதை விடுத்து புதிய காலத்துக்கு ஏற்றவாறு மாற்றங்களுக்கு உட்படுத்துவதுதான் இங்கு பிரதானமானது.

வாக்குகளை நோக்காகக் கொண்டல்லாது பிள்ளைகளுக்காக உண்மையைப் பேச வேண்டும்." - என்றார்.

### மாணவர்களைத்...

கடந்த 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 14 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்ட 7 மாணவர்கள் மற்றும் இன்று கைது செய்யப்பட்ட 6 மாணவர்கள் உட்பட 13 பேருக்கே விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி இரவு சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாயப் பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்று வந்த மூன்று மாணவர்கள் அதே பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட மாணவர்களால் தக்கப்பட்டு பலாங்கொடை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### துப்பாக்கி...

சென்ற குடும்பஸ்தர் ஒருவர் துப்பாக்கி வெடித்ததில் உயிரிழந்துள்ளார்.

தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். வேட்டைக்குச் சென்றபோது நாட்டுத் துப்பாக்கியை இயக்க முயன்றபோது அது வெடித்ததில் குடும்பஸ்தர் உயிரிழந் துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# அஸ்வெசும மேன்முறையீட்டு விசாரணைகள் வடக்கு மாகாணத்தில் நிறைவு செய்யப்பட்டன

## இராஜாங்க நிதி அமைச்சர் தெரிவிப்பு

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் மேன்முறையீடுகள் தொடர்பான விசாரணைகள் வடக்கு மாகாணத் திலேயே முதலில் நிறைவு செய்யப் பட்டன என்று இராஜாங்க நிதி அமைச் சர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான கலந்துரையா டல் இராஜாங்க நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் நேற்று (13) நடைபெற்றது.

கொழும்பு – 01 இல் அமைந்துள்ள நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டார்.

அஸ்வெசும நலன்புரி திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் இரண் டாம் கட்டச் செயற்பாடுகளை நாளை 15ஆம் திகதி ஆரம்பிக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத் துக்கு மாகாண சபைகளின் ஒத் துழைப்பையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இன்றைய கலந்துரையா டல் நடத்தப்பட்டது.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் முதலாம் கட்ட நடவடிக்கையின் போது 1.1 மில்லியன் மேன்முறையீடுகள் நாடளாவிய ரீதியில் கிடைக்கப்பெற்றன.

அவற்றில் வடக்கு மாகாணமே முதலாவதாக மேன்முறையீட்டு விசாரணைகளை நிறைவு செய்து பயனாளிகளின் தரவுகளை இற்றைப் படுத்தியதாக இராஜாங்க நிதி அமைச் சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் தரவுகள் தயார் நிலையில் உள்ளது என்றும் இதனூடாக புதிய பயனா ளர்களை தெரிவு செய்வது இலகுவாக அமையும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரி வித்தார்.

இந்தத் திட்டத்தை மேற்பார்வை செய்வதனூடாக உரிய இலக்கை அடைய முடியும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். அத்துடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக் கான நிலையான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

# பெண்களின் பெரும்பான்மைப் பங்களிப்புடன் எதிர்காலத்தில் பலமான அரசை அமைப்போம்!

## அனுராதபுர பெண்கள் மாநாட்டில் தேசிய ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய





(அஸ்ஹர் இப்றாஹிம்)

பெண்களின் பெரும்பான்மைப் பங்களிப்புடன் எதிர்காலத்தில் பலமான அரசை அமைப்போம். இந்த நாட்டி லுள்ள பெண்கள் பொருளாதார ரீதி யில் மிகவும் மோசமாக பாதிக்கப் பட்டுள்ளனர். எமது பெண்கள் மாநாடு க்குத் திரண்டு வருவதிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளக் கூடிய தாக உள்ளது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற பெண் கள் மாநாட்டில் உரையாற்றிய நாடா ளுமன்ற உறுப்பினர் ஹரினி அமர சூரிய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்,

எதிர்காலத்தில் பெண்களின் பாரிய பங்களிப்போடு பலமான அரசு ஒன் றைத் தேசிய ஐக்கிய முன்னணி அமைக் கும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது.

அரசியல் ரீதியில் இதுவரை காலமும் கடைப்பிடித்த தவறான கொள்கையின் பிரதிபலனை இன்று ஒட்டு மொத்த நாடும் எதிர் கொள்ளுகின்றது. பொரு ளாதார ரீதியில் பெண்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். குடும்பத் தலை விகளாக இருந்து கொண்டு தமது பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவது மிகவும் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அரச தலைவர்களின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் குடும்பப் பெண்கள் நுண்கடன் திட் டமென்ற கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக் கின்றனர்.–என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மக்களுக்குப் பதில் கூறுங்கள்!

இலங்கையின் நாடாளுமன்றம், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளைப் புறந்தள்ளி, இணையத்தள நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

மிகவும் சர்ச்சைக்குரிய இணையப் பாதுகாப்புச் சட்டத்தை இந்த ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி சாதாரண பெரும்பான்மையுடன் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. எனினும் உயர் நீதிமன்றம் இது நாடாளுமன்றாத்தில் மூன்றில் இரண்டு பெருமான்மையினால் நிறைவேற்றப்பட வேண்டுமென கூறியிருந்தது.

இணையத்தளப் பாதுகாப்புச் சட்டத்தை கவனமாக ஆராய்ந்த பின்னர், அதிலுள்ள பல பிரிவுகள் உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு அமைவாக இல்லை என்பதையும், அதில் பல அம்சங்கள் விடுபட்டுள்ளன என்பதையும் அவதானிக்க முடிவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளிப்படையாகக் கூறுகிறது.

அது மட்டுமல்ல, உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள் மேற்படி நிறவேற்றப்பட்ட சட்டத்தில் எந்தெந்தப் பிரிவுகளில் புறந்தள்ளப்பட்டுள்ளன என்ற விடயத்தையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விலாவாரியாக விவரித்துள்ளது.

பிரிவு 13 (சட்டமூலத்தின் பிரிவு 13), பிரிவு 16 (சட்டமூலத்தின் பிரிவு 17), பிரிவு 19 (சட்டமூலத்தின் பிரிவு 21), பிரிவு 20 (சட்டமூலத்தின் பிரிவு 22) மற்றும் பிரிவு 27 (சட்டமூலத்தின் பிரிவு 31) ஆகியவை மீறப்பட்டுள்ளன என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்படி விவரமாக - பிரிவுகள் ரீதியாக - பிழைகள், புரட்டுகள், தவறுகள் சுட்டிக் காட்டப்பட்ட பின்னரும் - அதுவும் நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினாலேயே வெளிப்படையாகவும், அப்பட்டமாகவும் அவை அம்பலப்படுத்தப்பட்ட பின்னரும் - உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமையவே இந்த இணையத்தளப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பொத்தம் பொதுவில் சமாதானம் கூறித் தப்ப முடியாது. அல்லது மௌனம் பேணி சமாளிக்க முடியாது.

நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது என சபாநாயகரால் சான்றளிக்கப்பட்ட ஒரு சட்டத்தின் செல்லுபடித் தன்மையை நீதிமன்றம் கேள்விக்கோ, சவாலுக்கோ உட்படுத்த முடியாது என்ற அரசமைப்புக் காப்பை - அரணை - தனக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு முறையற்ற வகையில், தம்மிஷ்டப்படி, கண்மூடித்தனமாக சட்ட மூலங்களுக்கு சபாநாயகர் சான்றளித்துத் தப்ப முடியாது.

இது விடயத்தில் சுட்டிக்காட்டப்படும் தவறு உண்மையானால் அதற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் இருவர். ஒருவர் - நாடாளுமன்ற சபாநாயகர். மற்றவர் - சட்ட மாஅதிபர்.

இருவருமே இத்தவறுக்கு - அல்லது இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் பிழைக்கு - தமது விளக்கத்தைக் கூறக் கடமைப்பட்டவர்கள். அந்தப் பதில் வெறும் மறுப்பாக - மூடி மறைக்கும் மழுப்பலாக - இருக்கக் கூடாது. அரசமைப்பு பிரிவுகள் ரீதியாகத் தவறு என்று கூறும் விடயங்களை உரிய விளங்கங்களுடன் அவர்கள் மறுத்து விளக்கமளிக்க முன்வரவேண்டும்.

"உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஏற்று அதை செயல்படுத்தத் தவறியமை, அந்தச் சட்டத்தின் தற்போதைய வடிவம் குறித்தும், நாடாளுமன்றத்தில் தேவையான அளவிற்கு வாக்குகளை பெறாமை குறித்தும் ஆழ்ந்த கவலை எழுகிறது" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய கூறியுள்ளமை கவனிக்கத் தக்கது.

இவ்விடயத்தில் சபாநாயகர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் நாட்டுக்கும் மக்களுக்கும் கூறப் போகும் பதில் - விளக்கம் - என்னவோ?

# நாடகமும் அரங்கியலும் முழுநாள் பயிற்சிப் பட்டறை

க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை, திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5மணி வரை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைதூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர் ,விவரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு 021222 2393, 0776692657, 077 6393620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறக்கொடை வீடமைப்புத் தொகுதி குரும்பசிட்டி மேற்கில் திறந்துவைப்பு






யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் குரும்பசிட்டி மேற்கில் வறுமைக் கோட்டுக்கு உட்பட கல்வி கற்கும் பிள்ளைகளின் குடும்பங்களுக்காக அமைக்கப்பட்ட “ஜெயதேவி கருமாரி அம்மா ஆனந்த நிலையம்” அறக்கொடை வீடமைப்பு தொகுதி கடந்த ஞாயிற்றுக் கிழமை (11) திறந்து வைக்கப்பட்டது.

இங்கு 9 வீடுகளை திரு திருமதி ஜெயசுப்பிரமணியம் றோகினி தம்பதியினர் அமைத்து வழங்கியுள்ளனர்.

அத்துடன் இங்கு வீடுகளுடன் வைரவர் ஆலயம், நூலகத்துடன் கூடிய படிப்பகம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர் , முன்னாள் பிரதேச செயலர் ச.சிவஶ்ரீ, யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் என். சண்முகலிங்கம், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் மற்றும் அந்தப் பகுதி மக்களும் கலந்துகொண்டனர்.

இந்தப் பெரும்பணியை நிறைவேற்றி பெரு மனத்துடன் கையளித்த பெரு வள்ளல்கள் திரு திருமதி ஜெயசுப்பிரமணியம் றோகினி தம்பதிகளுக்கு விருந்தினர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.









# சின்ன உப்போடை புனித லூர்த்து ஆலயத்தின் பெருவிழா நிறைவு!

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு சின்ன உப்போடை புனித லூர்த்து அன்னையின் பெரு விழா சனிக்கிழமை (10) மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் இடம் பெற்றது. கொடியிறக்கத்துடன் இவ்வாண்டிற்கான திருவிழா இனிதே நிறைவுபெற்றது.

அன்னையின் சுற்றுப் பிரகாரம் ஆலயத்தில் இருந்து வழமையான வீதிகள் ஊடாக சென்று, மீண்டும் ஆலயத்தை வந்தடைந்திருந்தது.

ஆயர் தலைமையில் இடம்பெற்ற பெருவிழாவில் இயேசு சபைத் துறவிகளான அருட்தந்தை சகாயநாதன், அருட்தந்தை ஏ.யேசுதாசன் அடிகளார் மற்றும் அருட்தந்தை விரைட்டன் அவுஸ்கோன் உள்ளிட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொது நிலையினர் பங்கு மக்கள் மற்றும் அயல் பங்கு மக்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசிரை பெற்றுக் கொண்டனர்.

இதன்போது ஆயரால் சிறுவர்களுக்கு உறுதிபூசுதல் வழங்கப்பட்டது.



# கடற்கரைப் பிரதேசம் தூய்மைப்படுத்தல்

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை கடற்கரையோரம் துப்புரவு செய்யும் பணி அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வானது அம்பாறை கரையோர பாதுகாப்பு திணைக்களம், அட்டாளைச்சேனை பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், அக்கரைப்பற்று பொலிஸ் திணைக்களம் அட்டாளைச்சேனை சுகாதார பணிமனை மற்றும் பல நிறுவனங்களின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

நிகழ்வில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எம். இஸ்மாயில், உதவி பிரதேச செயலாளர் திருமதி முஷாபிர், கணக்காளர் எம். ஏ. றிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல்.மஜித், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ எல். ஜௌபர், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ. எம். ஹமீட் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# அச்சுவேலி புனித திரேசாவில் இன்று காலை தேசிய நிகழ்வு

அச்சுவேலி யாழ். புனித திரேசா பெண்கள் கல்லூரியில் பிரிவெனா மற்றும் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இலவச பாடநூல் மற்றும் பாடசாலை சீருடைத் துணிகள் பகிர்ந்தளிக்கும் தேசிய நிகழ்வு இன்று காலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.



# முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் இலவச குடி தண்ணீர் இணைப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின், கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் உள்ள வறுமைக் கோட்டியின் கீழ் வாழும் 100 குடும்பங்களுக்கு முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் இலவச குடி தண்ணீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 13 குடும்பங்களுக்கு இலவச குடி தண்ணீர் இணைப்பு நேற்று முன்தினம் (12) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனியால் வழங்கப்பட்டது.



குடி தண்ணீரின் தேவையைப் பூர்த்தி செய்து சுத்தமான குடி தண்ணீரை வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது.

பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நீரிணைப்பு வழங்கும் நிகழ்வில் நிர்வாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முஸ்லிம் எயிட் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் றமீஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# காத்தான்குடி, காங்கேயனோடையில் இரத்ததான முகாம்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

காங்கேயனோடையில் இரத்த தான முகாம் காங்கேயனோடை அல் அக்ஸா மகா வித்தியாலய மண்டபத்தில் நடை பெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கிக்கு வழங்குவதற்காக இந்த இரத்த தான முகாம் காங்கேயனோடை ஓடை உணவக ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் இரத்த வங்கிக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி அலிமா ரஹ்மான் தலைமையில் ஆதர வைத்தியசாலையின் வைத்தியர்கள் , தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் இதில் கலந்து கொண்டதுடன்

இதன் போது ஆண்கள் பெண்கள் என பலரும் இரத்த தானம் செய்தனர்.

ஓடை உணவக ஸ்தாபனத்தினரும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# திருப்பாடுகளின் நாடகத்துக்கு பிரதி வழங்கும் நிகழ்வு இன்று

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் நிகழ்வு தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய இன்று (14) புதன்கிழமை மாலை 5 மணிக்கு இல.17,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மூத்த அருட்தந்தையர்களில் ஒருவரான அருட்தந்தை ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார். ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் அவர் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கும் அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த ஆண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களுக்கு 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப் படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரால் இறுதியாக எழுதப்பட்ட 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2012 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது எட்டு ஆண்டுகளின் பின் மீண்டும் மேடையேற்றப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பாலமுனை பாலர் பாடசாலைக்கு கதிரைகள் வழங்கி வைப்பு

(எம். எப். நவாஸ்)

பாலமுனை ஹில்ப் சமூக சேவை மன்றத்த ஹில்ப் இங்லீஸ் ஹவுஸ் பாலர் பாடசாலை நிர்வாகத்தினர் ‘91 சிறந்த வழிகாட்டிகள்’ அமைப்பிடம் மாணவர்களுக்கான கதிரைகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அண்மையில் அந்த் அமைப் பின் நிர்வாகத்தினர் மாணவர்களுக் கான கதிரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் அமைப்பின் தலை வர் வை.எல்.எம்.றிப்கான் , செயலா ளர் எ.மு.றிபான், பொருளாளர் ஆர். எம்.சமீர், உபதலைவர் கே.ஆர்.கியாஸ், உப செயலாளர் ஐ.எம்.ஹம்தான், நிர் வாக உறுப்பினர்கள், ஹில்ப் இங்லீஸ் ஹவுஸ் பாலர் பாடசாலை நிர்வாகத் தின் தலைவர் எம்.ஜே.எம்.றிஸ்வான், செயலாளர் ஏ.எல்.தாஸீம், நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாண வர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது பிரதேச செயலாளர் கௌரவிப்பு



(அஸ்ஹர் ஆதம்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் பொது மக்களுக்காக ஆற்றிவரும் உன்னத சேவைக்காக பிரதேச செயலாளர் எம். எம்.ஆசிக் பாராட்டி கௌரவிக்கப் பட்டுள்ளார்.

ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை அமைப்பினர் இவரைப் பொன்னாடை போத்திக் கௌரவித்தனர்.

# அரச சார்பற்ற நிறுவனங்களை சந்தித்த சிவில் சமூக அமைப்பு!



( வவுணதீவு எஸ். சதீஸ் )

அடுத்து கொண்டு வரப்படவிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும் உத்தேச வரைவுச் சட்டம் குறித்து சிவில் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய கூட்டமைப்பு பிராந்திய மட்டங்களில் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன.

கிழக்கு மாகாணத்திற்கான கலந்துரையாடல் மட்டக்களப்பு மியானி வள நிலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மனித எழுச்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டுவரும் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சிவில் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் தேசிய கூட்டமைப்பின் இணைப்புக்குழு உறுப்பினர்களான ஏ.சொர்ணலிங்கம், பீ.கௌதமன், றுக்கி பெர்னான்டோ, கே.நிஹால் அஹமட் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

தற்போது கொண்டு வரப்படவிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும் உத்தேச வரைவுச் சட்டம் பல்வேறு வகைப்பட்ட சிவில் சமூக அமைப்புக்களை ஒரே சட்டத்தினுள் உள்ளடக்கி பதிவு செய்து கொள்வதற்கு வற்புறுத்துவதாக கலந்து கொண்ட சிவில் சமூக அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

சிவில் சமூகத்துக்காக இலங்கை அரசமைப்பில் பொதிந்துள்ள அடிப்படை உரிமைச் சுதந்திரங்களை, தற்போது கொண்டு வர உத்தேசித்திருக்கும் புதிய சட்ட வரைவு மறுதலிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச வரைவுச் சட்டத்தின் ஏற்புடைமை ஜனநாயகத்துக்கு விரோதமானதாகக் காணப்படுவதோடு ஏதோவொரு வகையில் அரசியல் அழுத்தத்தைப் பிரயோகித்து அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படவேண்டும் என்பது போன்ற மறைமுக அழுத்தம் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இது விடயமாக சிவில் சமூக அமைப்புக்கள் – அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உத்தேச வரைவுச் சட்டத்தை முன்னிலைப்படுத்திக்கூறி பின்னூட்டல்களை வழங்குவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு, செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தால் மூன்று வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனையோருக்கு எதிரான அடக்கு முறைச் சட்டங்கள் மற்றும் பழிவாங்கல்களின் பரந்துபட்ட அரசியல் சட்ட சூழமைவைக் கருத்தில் கொண்டு நாம் செயற்படுகின்றோம்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் போன்ற ஜனநாயகமற்ற சட்டம் உருவாக்கும் செயன்முறைகளைத் தவிர்த்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் நாம் வலியுறுத்தி வருகிறோம். – என்றுள்ளது.

சிவில் சமூக அமைப்புக்களின் சார்பில் மைத்திரி ராஜசிங்கம், பிலிப் திஸ்ஸாநாயக்க, ரோஹன ஹெட்டியாராச்சி மற்றும் என். ஹர்ஷா ஜயரத்ன ஆகியோர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.





# பொத்துவிலில் 1000 குடும்பங்களுக்கு நீர்வழங்கல் திட்டம் அங்குரார்ப்பணம்

(அஸ்ஹர் ஆதம்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவரும், சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷாரப்பின் முயற்சியின் பயனாக, தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக பொத்துவில் பிரதேசத்துக்கு மேலும் 1000 குடும்பங்களுக்கான நீர் இணைப்பைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நீர்வழங்கள் வடிகாலமைப்பு சபையின் பொத்துவில் அலுவலகப் பொறுப்பதிகாரி அஸீஸ் தலைமையில் ஹெட ஓயா, நீர் உள்ளீர்ப்பு உந்து நிலையத்தில் நேற்று (13) இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்து கொண்டார். பொத்துவில் பிரதேச செயலாளர எம்.ஐ.பிர்னாஸ், நீர்வழங்கள் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் யூ.கே.எம் முஷாஜித், நீர்வழங்கள் வடிகாலமைப்பு சபையின் பொறியலாளர்கள், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பொத்துவில் கிளை தலைவர், அனைத்துப் பள்ளிவசால்கள் அமைப்பின் தலைவர், பொத்துவில் பிரதேசத்தில் உள்ள மூவின மதத் தலைவர்கள், கமக்கார அமைப்பின் தலைவர் உட்பட பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# கொத்மலை வலயப் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்





(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் கங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ரமேஸ்வரனால் கொத்மலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 25 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கொத்மலை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் , இ.தொ.க வின் தவிசாளருமான மருதப்பாண்டி ரமேஸ்வரன், கொத்மலை பிரதேச செயலாளர் லக்மால், கல்வி பணிப்பாளர் பனாங்வெல, கோட்டக் கல்வி பணிப்பாளர் இங்கர்ஷால், உடற்கல்வி மற்றும் ஆரம்ப பிரிவுக்கான உதவிக் கல்வி பணிப்பாளர் ரவிந்திரன், பிரதேச செயலக திட்டமிடல் உதவி பணிப்பாளர் சமரசிங்க, மற்றும் பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டனர்.



# கிராம சேவையாளர்கள் ஐவர் யாழில் கௌரவிப்பு!

(பரீட் இக்பால்)

ஐந்து கிராம சேவையாளர்கள் யாழ்ப்பாணத்தில் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மஸ்ற உத்தீன் பாடசாலை மண்டபத்தில் யாழ். கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் அஷ்ஷேக் எம்.ஏ.பைஸர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வு யாழ்.- கிளிநொச்சி மாவட்ட சர்வமதத் தலைவர் அஷ்ஷேக் ஏ.எம்.ஏ.அஸீஸின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிராம சேவையாளர்களான தீபன் பிரதீபா, ரசிகலா விஜயரத்தினம், ஸ்ரீவைகுந்தநாதன் ரமணன், ஜெயபாலன் சுதர்சன், ஜோன் கலிஸ்டன் ஆகியோரே யாழ். முஸ்லிம் ஒன்றியத்தால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். முஸ்லிம் ஒன்றிய தலைவர் ஏ.எப். ஆரிப், கிராம அபிவிருத்தி தலைவர் பி.எஸ்.எம்.சரபுல் அனாம், கதீஜா கல்லூரி அதிபர் ஜான்ஸி கபூர், மனித உரிமைகள் பணிப்பாளர் டாக்டர் என். சுபாஸ், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸ்ரீ ரங்கநாதன் கோவிநாத், சமுர்த்தி முகாமையாளர் கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.











# நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தை பார்வையிட்டுள்ள தௌபீக் எம்.பி.!

(எஸ்.சினீஸ் கான்)

திருகோணமலை மாவட்ட குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக குச்சவெளி பள்ளவக்குளம் பிரதேசத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கின் வேண்டுகோளுக்கு இணங்க நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வரகிறது.

சமூக நீர்வழங்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைக்கப்பட்டுவரும் இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நேற்று செவ்வாய்க் கிழமை (13) நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

இதன்போது, இந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக பிரதேச மக்களிடம் கலந்துரையாடப்பட்டது.



# பெரும்போக அறுவடையில் விவசாயிகள் மும்முரம்!

(ஹஸ்பர்)

பெரும்போக வேளாண்மை செய்கையின் அறுவடை தற்போது இடம் பெற்று வருகிறது.

கிண்ணியா பகுதியின் குறிஞ்சாக்கேணி கமநல சேவை பிரிவின் சூரங்கல் விவசாய நிலப் பகுதியில் நெற் செய்கை அறுவடை இடம்பெற்ற போதிலும் விளைச்சலில் குறைவு ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள்ள தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் நெல்லுக்கான விலையும் குறைந்து காணப்படுவதால் பாரிய நஷ்டங்களை எதிர் கொள்கின்றனர் என்று விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இந்தப் பகுதியில் சுமார் 1200 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெல் அறுவடை இடம் பெறுகிறது.

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக தங்களது வயல் நிலங்கள் அழிவடைந்ததால் ஒரு ஏக்கருக்கு எட்டு தொடக்கம் பத்து மூடைகளுக்கும் குறைவாகவே விளைச்சல் கிடைக்கிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு போட்டியிடுகிறார் சோனியா காந்தி

## ரேபரேலி தொகுதியில் களமிறங்குகிறார் பிரியங்கா



மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு சோனியா காந்தி போட்டியிடவுள்ளார் என்றும் சோனியா காந்திக்கு பதிலாக ரேபரேலி தொகுதியில் பிரியங்கா காந்தியை களமிறங்க திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1997 டிசம்பரில் சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அவர் கட்சியில் சேர்ந்த சில மாதங்களில் காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். உடல் நலக் குறைவு காரணமாக கடந்த 2017 ஆம் ஆண்டு கட்சித் தலைவர் பதவியில் இருந்து அவர் விலகினார். அவரது மகன் ராகுல் காந்தி புதிய தலைவராக பதவியேற்றார்.

கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் பெரும் பின்னடைவை சந்தித்தது. இதற்கு பொறுப்பேற்று தலைவர் பதவியில் இருந்து ராகுல் விலகினார். இதைத் தொடர்ந்து கடந்த 2019 ஆம் ஆண்டு ஒகஸ்டில் காங்கிரஸின் தற்காலிக தலைவராக அவர் பதவியேற்றார். கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபரில் காங்கிரஸின் புதிய தலைவராக மல்லிகார்ஜுன கார்கே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு உத்தர பிரதேசத்தின் அமேதி தொகுதியில் சோனியா காந்தி முதல்முறையாக போட்டியிட்டார். பின்னர் அவர் உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதிக்கு மாறினார்.

கடந்த மக்களவைத் தேர்தலிலும் ரேபரேலி தொகுதி அவர் வெற்றி பெற்றார். எனினும் எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் சோனியா காந்தி ரேபரேலியில் போட்டியிட மாட்டார். ராஜஸ்தானில் இருந்து அவர் மாநிலங்களவை எம்.பியாக தேர்வு செய்யப்படுவார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

"வயது முதுமை, உடல்நலக்குறைவு காரணமாக இந்த முறை ரேபரேலி மக்களவைத் தொகுதியில் சோனியா காந்தி போட்டியிட மாட்டார். ராஜஸ்தான் சட்டப்பேரவையில் காங்கிரஸுக்கு போதிய எம்.எல்.ஏக்கள் உள்ளனர். அங்கிருந்து மாநிலங்களவைக்கு அவர் தேர்வு செய்யப்படுவார்.

உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதியில் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா காந்தி போட்டியிடக்கூடும். அவர் முதல்முறையாக தேர்தலை சந்திக்க உள்ளார்.

இதுதொடர்பாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் டில்லி வீட்டில் கடந்த திங்கள் கிழமை விரிவான ஆலோசனை நடைபெற்றது. இந்த விவகாரங்களில் கட்சி தலைமை விரைவில் இறுதி முடிவு எடுக்கும்." என்று தெரிவித்துள்ளன.

# எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் கமல் கட்சிக்கு டோர்ச் லைட் சின்னம்



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம்கட்சிக்கு டோர்ச் லைட் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி தனது அரசியல் பயணத்தை கமல்ஹாசன் தொடங்கினார். இதைத் தொடர்ந்து அன்றைய தினம் மதுரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தனது கட்சிப் பெயரை மக்கள் நீதி மய்யம் என அறிவித்தார். தொடர்ந்து, நடைபெற்ற மக்களவை, சட்டப்பேரவைத் தேர்தல்களில் டோர்ச் லைட் சின்னத்தில் அக்கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்த நிலையில் எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் தங்களுக்கான சின்னத்தை டிசம்பர் 17 ஆம் திகதிக்கு முன்னர் கேட்டுப் பெறலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. அன்றைய தினமே டோர்ச் லைட் சின்னம் கோரி மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் விண்ணப்பிக்கப்பட்டது.

இதையடுத்து, நேற்று தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிவிப்பில், மக்களவைத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் மக்கள் நீதி மய்யம்கட்சிக்கு டோர்ச் லைட் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

# டில்லி போராட்டத்துக்கு ஆதரவாக திருச்சியில் விவசாயிகள் மறியல்

## 66 பேர் பொலிஸாரால் கைது



டில்லி விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவாக திருச்சியில் நேற்று மறியலில் ஈடுபட்ட தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் கைது செய்யப்பட்டனர்.

வேளாண் விளை பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்கும் சட்டத்தை இயற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லியில் போராட்டம் நடத்த விவசாயிகள் திரண்டு வருகின்றனர். ஆனால், அவர்களைத் தடுக்க பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதைக் கண்டித்தும், விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தியும் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் திருச்சி தலைமை அஞ்சல் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் பி.அய்யாக்கண்ணு தலைமை வகித்தார்.

அப்போது, “ஜனநாயக நாட்டில் விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி எந்தப் பகுதியிலும் போராடலாம் என அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமையை பறிக்கும் வகையில், மத்திய அரசு போராட்டத்தை தடுக்க முயற்சிக்கிறது” என்று தெரிவித்த விவசாயிகள், வீதியில் படுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் சில விவசாயிகள் அருகில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தின் மீது ஏறி கோஷமெழுப்பினர். அவர்களை பொலிஸார் சமாதானப்படுத்தி, கீழே இறங்கச் செய்தனர். தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் 66 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

# பா.ஜ.கவுக்கு தாவுகிறார் காங்கிரஸ் விஜயதரணி



காங்கிரஸ் சார்பில் விளவங்கோடு தொகுதியில் எம்.எல்.ஏவாக தொடர்ந்து மூன்று தடவைகள் வெற்றிபெற்ற விஜயதரணி பா.ஜ.கவுக்கு தாவவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி பா.ஜ.கவுக்கு கணிசமான வாக்கு வாங்கி கொண்டது. தற்போது காங்கிரஸை சேர்ந்த வசந்தகுமாரின் மகன் விஜய் வசந்த் அந்த தொகுதி எம்.பியாக உள்ளார்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் இத்தொகுதியை காங்கிரஸ் தக்க வைக்குமா அல்லது பா.ஜ.க. வெல்லுமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

காங்கிரஸ் சார்பில் மீண்டும் விஜய்வசந்த்துக்கே ஆசனம் வழங்கவுள்ளதாக கூறப்படுகிறது.

அதேநேரம், 3 முறை விளவங்கோடு தொகுதியில் எம்.எல்.ஏவாக தொடர் வெற்றிபெற்ற விஜயதரணி, இம்முறை கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியில் போட்டியிட தனக்கு எம்.பி. ஆசனம் வழங்க வேண்டும் என காங்கிரஸ் மேலிடத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஆனால், அதுகுறித்து எவ்வித தகவலும் காங்கிரஸ் தரப்பில் இல்லாத நிலையில், பிரதமர் மோடி முன்னிலையில் விஜயதரணி பா.ஜ.கவில் இணையப் போகிறார் என்றும் அவர் குமரி தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிடவுள்ளார் எனவும் சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரவியுள்ளன.

# உண்ணாவிரதத்தை கைவிட்டார் முருகன்



திருச்சி சிறப்பு முகாமில் முருகனால் முன்னெடுக்கப்பட்டுவந்த உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று, உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட சாந்தன், முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், முருகன் தன்னை முகாமிலிருந்து விடுவித்து, லண்டன் அனுப்ப வலியுறுத்தி கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்துவந்தார். முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் தனது கணவரின் உடல்நிலை மோசமாகி வருவதால், அவரைக் காப்பாற்ற நடவடிக்கைஎடுக்கக் கோரி, தலைமைச் செயலர், திருச்சி ஆட்சியர், பொலிஸ் ஆணையருக்கு முருகனின் மனைவி நளினி கடிதம் எழுதினார்.

இந்த நிலையில், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் தனித் துணை ஆட்சியர் நஸிமுநிஷா, முருகனிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

மேலும் லண்டன் செல்வதற்கான பாஸ்போர்ட் எடுக்க சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தரவாதம் அளித்ததையடுத்து, முருகன் 14 நாள்கள் உண்ணாவிரதத்தை நேற்று முன்தினம் கைவிட்டார்.



# படுகொலைக்கு வழிவகுக்கும் இஸ்ரேல் ஐ.நா.மனிதாபிமான பிரதானி எச்சரிக்கை

காசாவின் தெற்கு நகரமான ரஃபா மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தினால் அது படுகொலைக்கு வழிவகுக்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான அமைப்பின் பிரதானி மார்ட்டின் கிரிஃபித்ஸ் எச்சரித்துள்ளார்.

காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் ஏற்கனவே பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஃபா மீதான படையெடுப்பின் விளைவுகள் “பேரழிவாக“ அமையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நகரில் பதுங்கியிருக்கின்றனர் என கூறப்படும் ஹமாஸ் ஆயுததாரிகளை தோற்கடிப்போம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், வழக்கத்திற்கு மாறாக வலுவான வார்த்தைகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான அமைப்பின் பிரதானி மார்ட்டின் கிரிஃபித்ஸ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் “ரஃபாவில் நெரிசலில் சிக்கி, மரணத்தை எதிர்நோக்கியுள்ளனர்” அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# காதலர் தின கொண்டாட்டத்திற்கு தடை விதித்துள்ள ஐந்து நாடுகள்

உலகெங்கிலும் கோலாகலமாகக் கொண்டாடப்படும் காதலர் தினத்தை 5 நாடுகளில் மட்டும் கொண்டாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை உத்தரவை மீறி கொண்டாடினால் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காதலர் தினக் கொண்டாட்டத்திற்கு தடை விதித்த முதல் நாடு சவுதி அரேபியா.

இந்த நாட்டில் காதலர் தினம் கொண்டாடப்பட்டால் உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக மலேஷியாவும் காதலர் தினக் கொண்டாட்டத்திற்கு தடை விதித்துள்ளது.

மலேசியா ஒரு இஸ்லாமிய நாடு என்பதால், இங்கே காதலர் தினம் கொண்டாட அனுமதி இல்லை. இந்த கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உஸ்பெகிஸ்தான் நாட்டில் பாபரின் பிறந்தநாள் பெப்ரவரி 14 ஆம் திகதி கொண்டாடப்படுவதனால், கடந்த 2012 இல் இருந்து காதலர் தின கொண்டாட்டத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

காதலர் தினக் கொண்டாட்டம் என்பது இஸ்லாமிய கொள்கைக்கு எதிரானது என பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இதனால் பாகிஸ்தானிலும் காதலர் தினத்தை கொண்டாடுவதில்லை.

ஈரானில் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் பிறகு காதலர் தினத்தை கொண்டாட கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், காதலர் தினத்தை சீரழிவு விழாவாக அறிவித்துள்ள ஈரான் நாட்டு அரசாங்கம், அந்த நாளில் காதலர் தினம் தொடர்பான பரிசுகள் மற்றும் பொருள்களை விற்பனை செய்வதற்கும் தடை விதித்துள்ளது.



# 1700 ஆண்டுகள் பழமையான கோழி முட்டை கண்டுபிடிப்பு

பிரித்தானியாவின் பெர்ரிஃபீல்ட்ஸ் பகுதியில் 1,700 ஆண்டுகள் பழமையான கோழி முட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முட்டையை ஆய்வு செய்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு, சேதமடையாத முட்டையின் மஞ்சள் கருவும் வெள்ளை கருவும் இன்னும் இயற்கையாக முட்டையில் பாதுகாக்கப்படுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

ஒக்ஸ்போர்டைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் எட்வேர்ட் பிடுல்ஃப், “1700 ஆண்டுகளுக்குப் பிறகும் மனித தலையீடு இல்லாமல் இயற்கையாகவே மஞ்சள் கருவும் வெள்ளைகருவும் பாதுகாக்கப்பட்ட உலகின் ஒரே முட்டை இது என்று நான் நம்புகின்றேன்” என்று கூறியுள்ளார்.